# TOBACCO TAX ACT

## (புகையிலை விற்பனை வரிச்சட்டம்)

தூய தமிழ்க் காவலர்
கு. மு. அண்ணல்தங்கோ
நூலகம்

The National Publishing House
THYAGARAYANAGAR

003324

Price As. 1½.] [விலை அணா 1½.

தூய தமிழ்க் காவலர்
கு. மு. அண்ணல்தங்கோ
நூலகம்

# சென்னை புகையிலை விற்பனை வரிச்சட்டம்.

இச்சட்டம் 1939 ௵ ஆகஸ்ட் ௴ 1௳ முதல் சென்னை மாகாணம் பூராவும் அமுலுக்கு வரும். இச்சட்டத்தின் முக்கியமான அம்சங்களையும் எப்படி ஒரு புகையிலை வியாபாரி லைஸன்ஸ் வாங்க வேண்டுமென்பதையும் இச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகளையும் ஜூன் ௴ 20௳ போர்ட்ஸெண்ட் ஜார்ஜு கெஜட்டில் காணலாம்.

ஆகஸ்ட் 1௳ முதல் ஒருவர் புகையிலையை மொத்தமாக விற்றாலும் அல்லது மொத்தமாகவோ, தயார் செய்தோ, தரகுக்காகவோ வியாபாரம் செய்தாலும் லைஸென்ஸ் கொடுக்கும் அதிகாரியிடம் லைஸென்ஸ் வாங்கவேண்டும். சில்லரைப் புகையிலை வியாபாரிகளும், புரோகர், தரகர் முதலியோரும் லைஸென்ஸ் வாங்கவேண்டும். தயார் செய்யப்பட்ட புகையிலை வியாபாரி தனியாக தயார் செய்யப்பட்ட புகையிலையை வியாபாரம் செய்தால் அதற்கு தனியாக லைஸென்ஸ் வாங்கவேண்டியதில்லை. ஒரு புகையிலை வியாபாரி அனேக கடைகளின் மூல்யமாக வியபாரம் செய்தால் ஒவ்வொரு கடைக்கும் லைஸென்ஸ் பிரத்தியேகமாக வாங்கவேண்டும். லைஸென்ஸ் வியாபாரிகள், புகையிலை பயிர் செய்பவரைத்தவிற மற்றுமுள்ளோர் கீழ்க்கண்ட அளவு புகையிலை அவர்கள் வசம் வைத்துக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| சுருட்டு, ஸிகார்களும் | 200 |
| ஸிகரெட்டு | 300 |
| ஸிகரெட்டுப்புகையிலை | 4 அவுன்ஸ் |
| குழாய்ப்புகையிலை | 1 பௌண்ட் |
| பீடிகள் | 100 |
| மூக்குத்தூள் | [illegible] வுன்ஸ் |

பதம்செய்யப்பட்ட அல்லது பதம்செய்யப்படாத புகையிலை I. எல். பீ.

வியாபாரம் செய்கிறவர்கள் புகையிலை உத்தியோகஸ்தரிடம் ஆகஸ்ட் ௴ 1௳க்குள் லைஸென்ஸ் வாங்குவது தாமதமாகுமென்ற காரணத்தினால் கீழ்க்கண்ட படி ஒரு லைஸென்ஸ் வாங்கும் புகையிலை

வியாபாரி நடந்து கொண்டால் ஆகஸ்ட்மீ 1வ யன்று லைஸென்ஸை அடையாதபோதிலும் அவர்மேல் மாகாண சர்க்கார் ஒரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளமுடியாது.

புகையிலை வியாபாரம் செய்யும் ஒருவர் உடனே கீழ்க் கண்ட படி ஒரு மனுதயாரித்து அதில் கண்டுள்ள விவரங்களை பூர்த்தி செய்து அவர் இருக்கும் தாலூக்கா தாசில்தார் பார்த்து உதவி கமர்ஷியல் உத்தியோகஸ்தரிடம் கொடுப்பது என்று விலாச மெழுதி அனுப்பிக்கவேண்டும்.

முதலில் பெயரை எழுதவேண்டும். பிறகு தயார் செய்யப் பட்ட புகையிலை விற்பனை செய்யும் மொத்த வியாபாரி; புகையிலை வியாபாரம் செய்யும் மொத்த வியாபாரி; தயார் செய்யப்பட்ட புகையிலையைத் தவிர வேறு புகையிலை வியாபாரம் செய்யும் வியாபாரி; தயார் செய்யப்பட்ட புகையிலை வியாபாரி; புகையிலை புரோகர்; தரகர்; சில்லரை வியாபாரி; அல்லது தெருவில் வியாபாரம் செய்பவர் என்று குறிப்பிடவேண்டும். பிறகு லைஸென்ஸ் கொடுக்கும் அதிகாரியிடமிருந்து கிடைக்கும் பாரத்தைப் பூர்த்தி செய்து பாரம் கிடைத்த 15ந்து நாளைக்குள்ளாக லைஸென் சந்தா, மொத்த வியாபாரத்தின்மேல் வரி முதலியவைகளைச் செலுத்துவதாக ஒத்துக் கொள்ளவேண்டும். கடைசியாக வசிக்குமிடம் அல்லது பொதுவாக வியாபாரம் செய்யும் இடத்தைக் குறிக்கவேண்டும். அவ்வியாபாரி தன்னுடைய கையொப்ப மிடவேண்டும்.

ஷை குறிப்பிட்ட மனுவை அனுப்பியதும் லைஸென்ஸ் கொடுக்கும் அதிகாரி தயார் செய்யப்பட்ட புகையிலை மொத்த வியாபாரம் செய்யும் வியாபாரிக்கு ஏ-1 பாரமும், தயார் செய்த புகையிலை தவிர வேறு புகையிலை வியாபாரம் செய்யும் மொத்த வியாபாரிக்கு ஏ-2 பாரமும், புகையிலையைத் தயார் செய்பவருக்கு ஏ-3 பாரமும், புரோகர் அல்லது தரகருக்கு ஏ-4 பாரமும், சில்லரை வியாபாரிக்கு ஏ-5 பாரமும் அனுப்பிப்பார். ஒரு வியாபாரி அவருக்குறித்தான பாரத்தில் அவர் சற்றேறக்குறைய வருஷத்தில் செய்யும் மொத்த வியாபாரத்தின் ரொக்கத்தையும் இன்னும் மற்றைய விவரங்களையும் பூர்த்தி செய்து அனுப்பிக்கவேண்டும். மேலும் அவர் இச்சட்டத்தின் 5-வது பிரிவின் கீழ் கட்டவேண்டிய லைஸென்ஸ் தொகையை செக்கு மூல்யமாக அனுப்பிக்கவேண்டும்; அல்லது ஸர்க்கார் கஜானாவில் பணத்தைக்கட்டி ரசீதை அனுப்பிக்கவேண்டும். லைஸன்ஸ் அதிகாரி மேற்கண்ட மனுவைப் பார்வையிட்டு லைஸன்ஸை அனுப்பிப்பார். புரோக்கர் அல்லது தரகர் அவர் வசிக்கும் தாலூக்கா உதவி கமர்ஷியல் உத்தியோகஸ்தரிட மிருந்து லைஸென்ஸைப் பெறலாம். அந்த லைஸன்ஸ் மாகாணம் பூராவும்

செல்லும். ஒரு லைஸென்தார் கூட்டு வியாபாரம் செய்தால் அச் செய்தியை கூட்டு ஆரம்பித்த 30 நாளைக்குள் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டும். தக்கவாறு லைஸென்ஸை மாற்றவும்வேண்டும் கூட்டு வியாபாரத்தை ரத்து செய்தாலும் 10 நாளைக்குள்ளாகத்தெரிவிக்கவேண்டும். லைஸென்ஸ் கெட்டுப்போனால் 4 அணா செலுத்தினால் புதிய லைஸென்ஸ் கிடைக்கும்.

## வரி நிர்ணயிப்பதும் வசூலிப்பதும்

400 ரூபாய்க்குமேற்படாமல் தயார் செய்யப்பட்ட புகையிலை வியாபாரம்செய்யும் சில்லரை வியாபாரியினுடைய மொத்த வியாபாரத்தை நிர்ணயிப்பதற்கு உதவி கமர்ஸியல் உத்தியோகஸ்தருக்கு அதிகாரம் உண்டு. மற்றய சில்லரை வியாபாரி, மொத்த வியாபாரி முதலியோருடைய மொத்த வியாபாரத்தின் அளவை நிர்ணயிப்பதற்கு டிபுடீ கமர்ஸியல் வரி அதிகாரிக்கு அதிகாரம் உண்டு. நிர்ணயிக்கும் அதிகாரிக்கு ஒவ்வொரு வியாபாரியின் மொத்த வியாபாரத்தை அவர் லைஸென்ஸுக்காக அனுப்பிக்கும் மனுவிலிருந்து ஒரு நிதானமாக நிர்ணயித்து அதன் பேரில் வருஷாந்தர வரி விதிக்கலாம். மேற்படி வரியில் ஒவ்வொரு மாதமும் முதல் 10-தேதிக்குள் 12-ல் ஒரு பங்கு வரியாக செலுத்தவேண்டும். லைஸென்தார் ஒவ்வொரு வருஷமும் ஏப்ரல்மீ 20உக்குள்ளாக அவர்கள் கணக்குகளை தயாரித்து அனுப்பிக்கவேண்டும். இந்த கணக்கிலிருந்து கராரான மொத்த வியாபாரத்தைக் கண்டுபிடித்து மொத்த வியாபாரத் தொகை முதலில் நிர்ணயிக்கப்பட்ட சுமார் மொத்தத் தொகையைவிட அதிகமாக இருந்தால் அதற்குத் தக்கவாறு வரியைக் வசூலிக்கப்படும். அதிகமாக வரி செலுத்தவேண்டுமென்றால் D-பாரத்தை பூர்த்தி செய்யவேண்டும்.

400ரூபாய்க்கு மேல் மொத்த வியாபாரம் செய்யும் வியாபாரியின் மொத்த வியாபாரம் கீழ்கண்ட பிரகாரமும் நிர்ணயிக்கப் படும். மொத்த வியாபாரி ஒவ்வொருமாதம் 10ம் தேதிக்குள் அவர் மொத்த வியாபாரத்தின் சராசரி தொகையை டெபுடி கமர்ஸியல் உத்தியோகஸ்தருக்கு அனுப்பிக்க வேண்டும். அத்தகையமொத்த வியாபாரத்தின் மேல் செலுத்தவேண்டிய வரியை செக்கு மூலமாக வசூல் செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கு அனுப்பிக்க வேண்டும்; அல்லது சர்க்கார் கஜானாவில் செலுத்தி ரசீதியை அனுபிக்கவேண்டும். ரசீதி கிடைத்தவுடன் டெபுடி கமர்ஸியல் அதிகாரி விசாரணையினால் கரானமொத்தவியாபாரம் என்னவென்று கண்டு பிடித்து அதிகமான வரி செலுத்தியிருந்தால் அத்தகைய அதிகமான தொகையை லைஸென்ஸ்தாருக்கு அனுப்பப்படும். குறைவாக வரி செலுத்திருந்தால் குறைந்த பணத்தை லைஸென்ஸ்தாரிடம் வசூலிக்கப்படும்.

வரிவிதிக்கும் உத்தியோகஸ்தர் உத்திரவின் மேல் அப்பீல் செய்வதற்கு ஒவ்வொரு லைஸன்ஸ்தாருக்கு அதிகாரம் உண்டு.

# சட்டத்தின் அம்சங்கள்.

## (இச்சட்டம் ஆக்ஸ்ட்மீ 1உ முதல் அமுலுக்குவரும்)

I (1) இச்சட்டத்தின் பெயர் சென்னை புகையிலைச் சட்டம்.

(2) இது மாகாணம் பூராவும் வியாபிக்கும்.

(3) இந்தப்பிரிவு உடனே மாகாணம் பூராவிலும் செல்லும். மற்றய பிரிவுகள் அப்போதைக்கப் போது கெஜட்டில் பிரசுரித்திருக்கிரபிரகாரம் அமுலுக்குவரும்.

### பதங்களின் விளக்கம்.

2. இந்தசட்டத்தில் விஷயத்திலோ சந்தர்பத்திலோ விரோதமொன்றும் இல்லாவிட்டால்:—

(1) 'தரகர்' அல்லது 'கமிஷன் ஏஜண்ட்' என்றால் அன்னியருக்காகதான் தொழில் நடத்துகையில் புகையிலை வாங்குவதற்காகவோ அல்லது விற்பதற்காகவோ ஒப்பந்தம் செய்கிறவர்.

(2) 'கலெக்டர்' என்றால் ஜில்லாகலெக்டர்; மேலும் 15-வது பிரிவின் கீழ் மாகாணசர்க்காரால் நியமிக்கப் படும் உத்தியோகஸ்தரும் 'கலெக்டர்' என்று வழங்கப்படுவார்.

(3) 'கமிஷனர்' என்றால் சட்டத்தின் படி கமிஷணருக்குள்ள அதிகாரங்களைச் செலுத்துவதற்கு மாகாண கவர்ன்மெண்டாறல் நியமிக்கப் படும் ரெவனியு போர்ட் மெம்பர் அல்லது இதர உத்தியோகஸ்தர்.

(4) 'பயிர் செய்பவர்' என்றால் தன்னுடைய உழைப்பினுலாவது தான் குடியிருக்கும் இடத்தைச் சேர்ந்தவர்களைக் கொண்டாவது தன்னுடைய வேலைக்காரர்கள் அல்ல குத்தகைதார்களினுலாவது புகையிலை பயிர் செய்யும் ஒருவர்; ஆனால் 1913-ம் வருஷத்தில் இந்தியன் கம்பெனிச் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்ட புகையிலை பயிற் செய்யும் பார்மும், வர்த்தகக் கூட்டமும், கோவாப ரேடிவ்

ஸொஸைட்டீஸ் என்னும் கூட்டுறவுச் சங்கங்களைக் குறித்த 1932-ம் வருஷத்திய சென்னை மாகாண ஆக்ட்டின்படி ரிஜிஸ்டார் செய்யப் பட்ட அல்லது ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படும் ஒரு சங்கமாவது அடங்காது.

(5) "இலை" என்றால் புகையிலையினுடைய காம்பையும் தண் டையும் குறிக்கும்.

(6) "லைஸென்ஸ் பெற்றவர்" என்றால் இந்தச் சட்டத்தின்படி லைஸென்ஸ் கொடுக்கப்பட்டவர்.

(7) " மாஜிஸ்ட்ரேட் " என்றால் (1) பிரெஸிடென்ஸி மாஜிஸ்ட் ரேட் (2) முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட் ரேட் (3) டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ரேட்டிடமிருந்து அதிகாரம் பெற்ற மூன்றும் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்.

(8) a) "தயார் செய்யப்பட்ட புகையிலை" என்றால் சிகார், சுருட்டு சிகரெட், சிகரேட்டுப் புகையிலை, பீடி, மூக்குத்தூள் முதலியவைகள்; ஆனால் இன்னும் தயார் செய்ய வேண்டிய தற்காக வைக்கப்பட்டிருக்கும் புகையிலை இந்தப் பதத்தில் சேராது.

(9) "தயார் செய்கிறவர்" என்றால் தயார் செய்யப்பட்ட புகை யிலையையாவது, அல்லது இன்னும் தயார் செய்யப்படவேண்டிய புகையிலையாவது யந்திரங்களைக் கொண்டாவது கையினாலாவது தயார் செய்யும் ஒருவர்.

(10) 'இடம்' என்றால் வீடு, கட்டடம், ஷெட், பங்குகடை, கூடாரம், பாத்திரம் முதலியவைகள்.

(11) 'விதிக்கப்பட்டது' என்றால் இச்சட்டத்தினால் விதிக்கப் பட்டது.

(12) "சில்லறை வியாபாரி" என்றால் சில்லறைப்புகையிலை விற் பனை செய்வதற்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்ட ஒரு வியாபாரி.

(13) "சில்லறை விற்பனை" என்றால் ஒருவருக்கோ அல்லது அவர் சார்பாகவோ அவருடைய உபயோகத்திற்காகவோ விற்பனை செய்வது என்று அர்த்தம். சில்லறையில் விற்பனை செய்வது என் னும் பதத்திற்கு அதே அர்த்தம் தான். சில்லரை விற்பனை இல்லை யென்று ரூபித்தாலொழிய சில்லரை விற்பனை செய்பவர் சில்லரை விற்பனை செய்ததாகக் கருதப்படுவார்.

(14) "விற்பனை அல்லது விற்கிறது" என்ற பதத்தில் இனு மாகக் கொடுக்கப்படும் சாமான்களைத் தவிர வேறு எந்த விதமான சாமான்களும் சேர்ந்தவை.

கூட்டுச் சங்கம், கிளப், வர்த்தகக் கூட்டம். ஒரு சங்கம் தன் அங்கத்தினர்களுககு விற்பனை செய்தால் இந்தப் பிரிவின்படி அது விற்பனை யென்று கருதப்படும்.

(15) "புகையிலை" என்றால் தயார் செய்யப்பட்ட புகையிலை, பதம் செய்யப்பட்ட அல்லது பதம் செய்யப்படாத புகையிலை, புகையிலை சேர்ந்த சாமான்கள், புகையிலை கலப்புள்ள சாமான்கள். புகையிலைச் செடியின் இலையும் அடங்கும்.

(16) "புகையிலை வருமானம்" என்பது இந்தச் சட்ட நிபந்தனைகளின்படி விதிக்கப்பட்ட அல்லது போடப்பட்ட அல்லது உத்தரவு செய்யப்பட்ட ஒரு வரி, கட்டணம், அபராதம் அல்லது பறி முதலிலிருந்து கிடைக்கத்தக்க வருமானம் இச் சட்டத்தின் கீழ் மாகாண சர்க்கார் வசூலிக்கப்படும் தொகைகளும் இந்தப் பதத்தில் சேர்ந்தது.

(18) "மொத்த வியாபாரத்தொகை" என்றால் புகையிலை ரொக்கத்திற்கோ பின்பணத்திற்கோ அல்லது விசேஷ காரணத்திற்கோ விற்கப்படும் மொத்தத்தொகை என்று பொருள்படும்.

(19) "மொத்த வியாபாரி" என்றால் வியாபாரத்திற்காக அல்லது தயார் செய்வதற்காக புகையிலையை வாங்குபவர் அல்லது விற்கிறவர்.

(20) "மொத்த விற்பனை" என்றால் வியாபாரத்திற்கோ அல்லது தயார் செய்கிறவர்களுக்கு விற்பனை செய்வதற்கோ அல்லது தயார் செய்வதற்கோ விற்பனை செய்வது. 'மொத்த விற்பனை' என்பதற்கு மேற்சொன்னபடி அர்த்தம் சொய்யலாம்.

(21) "வருஷம்" என்றால் பண நிர்வாகத்திற்குரிய வருஷம்.

## புயைிகலையை லைசென்ஸ் இல்லாமல் விற்பனை செய்தால் அதற்கு விலக்கு

3. (1) இச்சட்டத்தின்படி புகையிலை அல்லது தயார் செய்யப்பட்ட புகையிலையை கலெக்டருடைய அனுமதியும் லைசென்ஸையும் பெறாமல் மொத்தமாகவோ அல்லது சில்லரையாகவோ அல்லது வேறுவிதமாகவோ விற்கக்கூடாது ; விற்பனைக்காகக்காட்டி வைக்கவும் கூடாது. மொத்தவியாபாரி, புகையிலையைத்தயார் செய்பவர், தரகர், புரோகர் முதலியவர்கள் லைஸென்ஸ் இல்லாமல் விற்கக் கூடாது. ஆனால் புகைப்யிலையைப்பயிர் செய்பவர் புகையிலையை இலையாகப்

பதம் செய்து வியாபாரம் செய்தால் அவர் லைசென்ஸைப் பெற வேண்டியதில்லை.

விவரிப்பு-1-ஒரு கிளப் அதனுடைய அங்கத்தினருக்கு அல்லது ஒரு ஹோட்டல் தன்னுடைய விருந்தினர்களுக்கு விலை, கட்டணம் அல்லது சந்தாவைப்பெற்று புகையிலையைவாங்கிக்கொடுத்தால் அத்தகைய சர்பரா இச்சட்டத்தின் கீழ் விற்பனை என்று கருதப்படும்.

விவரிப்பு-11-புகையிலையைத் தயார் செய்து விற்பவர் தன்னால் தயார் செய்து புகையிலையை மொத்தமாகவோ அல்லது சில்லரையாகவோ விற்பனை செய்தால் அவர் லைசென்ஸ் இச்சட்டத்தின் பிரகாரம் பெறவேண்டும்.

(2) லைசென்ஸைப் பெற்ற மொத்த வியாபாரி தயார் செய்யப்பட்ட வியாபாரி, புரோகர் அல்லது தரகர் புகையிலையை சில்லரையாக விற்கவேண்டுமானால் தனியாக சில்லரை வியாபாரி என்று லைசென்ஸ்ப்பெற வேண்டும்.

## சில்லரை மொத்த வியாபாரிகளின் மொத்த வியாபாரத்தின் மேல்வரி

4. (1) ஒவ்வொரு சில்லரை வியாபாரியும் ஒவ்வொரு வருஷமும் அவரால் சில்லரையாக விற்கப்பட்ட தயார் செய்த புகையிலையின் மொத்த வியாபாரத்தின் மேல் விதிக்கப்படுகிற வரியை கீழ்க்கண்டபடி செலுத்த வேண்டும்

| | |
|---|---|
| (a) 200 ரூபாய்க்கு மேல் மொத்த வியாபாரம் செய்தால், | வருஷத்திற்கு 6 ரூ கொடுக்க வேண்டும் |
| (b) 200 ரூபாய்க்கு மேற்பட்டு 400 ரூபாய்க்கு உட்பட்டால், | 12 ரூ |
| (c) 400 ரூபாய்க்கு மேற்பட்டால் | மொத்த வியாபாரத்தில் முதல் 400 ரூக்கு 100 ரூக்குமூன்று ரூபாயும், பாக்கிக்கு 100க்கு 10 ரூபாயும்கொடுக்க வேண்டும், |

ஆனால் இந்த வரி விகிதத்தை மாகாணசர்க்கார் மாத்தலாம்

(2) ஒவ்வொரு மொத்த வியாபாரியும் ஒவ்வொரு வருஷமும் தன்னால் தயார் செய்யப்பட்ட புகையிலையின் மொத்த வியாபாரத்தில் 100க்கு 2 சதம் வீதம் வரி செலுத்தவேண்டும். ஆனால் ஒருவர் 1000ரூக்கு மேற்படாமல் தயார் செய்யப்பட்ட புகையிலையை ஒரு மொத்த வியாபாரிகளுக்கு சரபரா செய்தால் ஒரு வரியும் அவர் செலுத்த வேண்டியதில்லை. ஷை வரிகளை அப்போதைக்கப்போது விதிக்கப்படும் விதியின் பிரகாரம் வசூல் செய்யப்படும்.

5. (1) சில்லறை வியாபாரி வாங்கும் லைஸென்ஸின் மேல் கட்டணம் ஒன்றும் விதிக்கமுடியாது. ஆனால் மொத்த வியாபாரி, தயார் செய்யும் வியாபாரி, தரகர், கமிஷன் ஏஜென்டு ஆகிய இவர்களுக்குக் கொடுக்கப்படும் ஒவ்வொரு லைஸென்ஸுக்கும் அடியில் கண்ட விதிப்படி கட்டணம் வசூலிக்கப்படும்.

(i) ஒரு மொத்தவியாபாரி தயார் செய்யப்பட்ட புகையிலையைத் தவிர வேறு எந்தவிதமான புகையிலையைவியாபாரம் செய்தாலும். — வருஷத்திற்கு 100ரூ செலுத்த வேண்டும்.

a ஆனால் அந்த மொத்த வியாபாரி 1000க்கு குறைவாக வியாபாரம் செய்தால், அந்த வியாபாரி சொற்ப வியாபாரியென்று லைஸென்ஸில் குறித்திருக்கவேண்டும். — 5ரூ

(b) அந்த வியாபாரி 1000ரூ, 1000ரூ மேல் 3000ரூ க்குள்பட வியாபாரம் செய்தால். — 10ரூ

(ii) அடுத்த உட்பிரிவில் கூறிய தயார் செய்கிற வியாபாரியைத்தவிர மற்றய மொத்தவியாபாரிகள். — 50ரூ

(iii) (a) 1934 வருஷத்து பாக்டரி சட்டதின் படிக்குள்ள அல்லது பிரயோகம் செய்யப்பட்டதும் 12 மாதங்களில் எந்த நாளிலாவது 200 அல்லது 200க்கு மேற்பட்ட வேலைசெய்யும் இடத்தில் ஒரு தயார் செய்யும் வியாபாரி. — 100ரூ

(b) 1934-ம் வருஷத்திய பாக்டரி சட்டத்திற்கு உட்பட்ட அல்லது பிரயோகம் செய்யப்பட்ட இடத்தில் உள்ள வேறு எந்த தயார் செய்யும் வியாபாரி. — 50ரூ

(c) ஷக்கூறியசட்டம் அமுலுக்கு வராத இடத்தில் தயார்செய்யும் வியாபாரி

(iv) புரோக்கர் அல்லது தரகர். — 50ரூ

ஆனால் 4-வது பிரிவின் 2-வது உட்பிரிவின்படி மொத்த வியாபாரத் தொகையின்பேரில் வரி செலுத்தும் எந்த மொத்த வியாபாரிக்கும் புகையிலையைத் தயார் செய்துகொண்டிருக்கும் மொத்த வியாபாரிக்கும் (i) (ii) (iiii)(a) அல்லது (iii)(b), பிரகாரம் கொடுக்கப்படுகிற ஒவ்வொரு லைஸென்ஸுக்கும் மேலே சொல்லிய கட்டணங்களுக்குப் பதிலாக 10ரூ.

(2) சட்டசபையினுடைய அதிகாரமில்லாமல் மேற்படிக்குறிப்பிட்ட சந்தாக்களை மாகாணசர்க்கார் மாற்றமுடியாது.

6. பயிர் செய்பவர், லைஸென்ஸைப் பெற்றவர்களைத்தவிர வேறு ஒருவரும் மாகாண கவர்ன்மெண்டார் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கும் அளவுக்கு மேல் புகையிலையை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கக்கூடாது.

7. இச்சட்டப்பிரகாரம் லைஸென்ஸ் அந்தந்த விஸ்தீரணத்திற்கு குறிப்பிட்ட கால அளவுக்கு நிபந்தனைகளுடன் கொடுக்கப்படும்.

8. ஒரு லைஸென்ஸ்தார் வெவ்வேறு இடங்களில் வியாபாரம் செய்தால் ஒவ்வொரு இடத்தில் வியாபாரம் செய்வதற்கும் தனியாக லைஸென்ஸைப் பெறவேண்டும்.

9. ஒவ்வொரு லைஸென்ஸ்தாரும் லைஸென்ஸில் குறிப்பிட்டிருக்கும் நிபந்தனையை நிறைவேற்றுவதற்கு உடன்படிக்கை ஒன்று எழுதிக் கொடுக்கவேண்டும். ஜாமினும் கொடுக்கும்படியாக நேரிடும்.

10. (1) மாகாண சர்க்காருடைய அதிகாரங்கள் லைஸன்தார் (a) இச்சட்டத்தின்படி செலுத்தவேண்டியதொகையைச்செலுத்தத் தவறினாலும், அல்லது (b) கணக்குவழக்குகளை சரியாக வைத்திராவிட்டாலும் அல்லது சரியான சமயங்களில் கணக்கை அனுப்பிக்காமலிருந்தாலும் (c) இச்சட்டத்திற்கு விரோதமாக ஏதாவது குற்றம் செய்தாலும் அவர்களுடைய லைஸென்ஸை ரத்தும் செய்யலாம்; செலாவணியாக வொட்டாமல் நிறுத்தியும் வைக்கலாம்.

(2) ரத்து செய்வதனாலோ, செலாவணியாகவொட்டாமல் நிறுத்தி வைப்பதனால் ஏற்படும் நஷ்டத்தையோ, ரொக்கத்திற்காக கட்டப்பட்டிருக்கும் தொகையை மாகாணச்சர்க்காரிடமிருந்து திரும்பியோ வாங்கமுடியாது.

11. இச்சட்டத்தின் கீழ் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய தொகையை நிலவரியை வசூலிப்பது போல் வசூலிக்கப்படும்.

12 இச்சட்டத்தின் கீழ் ஒவ்வொரு லைஸென்ஸ் தாரும் கணக்கு ஒழுங்காக வைத்து கலெக்டருக்கோ அல்லது சர்க்காரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தருக்கோ ஒப்புவிக்கவேண்டும். இது விஷயமாக கணக்குகளையும் பரிசோதனை செய்வதற்கு சரக்குகள்

இருக்கும் இடத்திற்குள் பிரவேசிப்பதற்கு ஷை உத்தியோகஸ்தருக்கு அதிகாரம் உண்டு.

13. மாகாண சர்க்காருடைய அதிகாரத்துக்கு உட்பட்டு இச்சட்டத்தின்படி வேலைநடத்துவதையும் புகையிலை வருமானம் வசூலிப்பதையும் மேல் விசாரணை செய்யலாம்.

14. மாகாண சர்க்கார், கமிஷனர் முதலியோருடைய அதிகாரத்துக்கு உட்பட்டு ஜில்லா கலெக்டர்கள் இச்சட்டத்தை நிறைவேற்றுவதற்கும் புகையிலை வருமானத்தை வசூலிக்கவும் அதிகாரம் உண்டு.

(15) இச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு பிரத்தியேகமாக ஜில்லாக்களில் கலெக்டர்களை நியமிக்கலாம்.

(16) மாகாண சர்க்கார் அல்லது கமிஷ்ணர் புகையிலை உத்தியோகஸ்தர்களை நியமிக்கலாம்.

(17) கலெக்டர், அதிகாரம் பெற்ற புகையிலை உத்தியோகதஸ்தர், அல்லது மேஜிஸ்டிரேட் ஒருவர் இச்சட்டத்துக்கு விரோதமாக நடந்திருக்கிறார் என்று சந்தேகம் ஏற்பட்டால் அவரைக் கைது செய்யலாம்.

(18) கலெக்டர் அல்லது அதிகாரம் பெற்ற புகையிலை உத்தியோகஸ்தர்—

(a) இச்சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்யக்கூடிய புகையிலையையும் மற்றும் வேறு வஸ்துக்களையும் கைப்பற்றலாம்.

(b) இச்சட்டத்தின்படி பறிமுதலாவதற்குட்பட்ட புகையிலையையும் மற்றும் வேறு வஸ்துக்களையும் கைப்பற்றலாம்.

(c) இச்சட்டத்திற்கு மீறி நடப்பவர்களை கைது செய்யலாம்.

(19) வாரண்ட் இல்லாமல் கைது செய்தால், அது கிரிமினல் புரோஸீஜர் கோட் 61-வது பிரிவு பிரகாரம் செய்யவேண்டும்.

(20) மாகாண சர்க்கார் பிரதேசசபையார் முதலியோரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் இச்சட்டத்திற்கு விரோதமாக யாராவது நடந்தால் அதை புகையிலை உத்தியோகஸ்தருக்குத் தெரியப்படுத்தவேண்டும். இச்சட்டத்திற்கு விரோதமாக நடக்குமென்று தோன்றினால் அவைத்தடுக்க முயற்சி செய்யவேண்டும். புகையிலை உத்தியோகஸ்தருக்கு ஒத்தாசை செய்யவேண்டும்.

(21) புகையிலை உத்தியோகஸ்தருக்கு இச்சட்டத்திற்கு விரோதமாக நடக்கும் குற்றங்களை விசாரிக்க அதிகாரம் உண்டு.

(21-33) இப்பிரிவுகள் புகையிலை உத்தியோகஸ்தருடைய அதிகாரங்களைப் பற்றிக் கூறுகின்றது. புகையிலை உத்தியோகஸ்தருக்கு இச்சட்டத்தை மீறி நடக்கும் குற்றவாளியை விசாரணை செய்து ஜாமீனில் விடவோ, குற்றவாளியிடம் பறிக்கப்பட்ட சாமான்களை குற்றத்தை நிரூபிப்பதற்காக சாக்ஷியமாக உபயோகிக்கவோ அதிகாரம் உண்டு.

## தண்டனைகள்.

(24-29) இச்சட்டத்திற்கு விரோதமாக நடக்கிறவர்களை மாஜிஸ்ட்ரேட்டு தண்டனைக்கு உட்படுத்தலாம். 1000க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கலாம். தொடர்ச்சியாக மீறி நடக்கும் ஒவ்வொரு குற்றவாளிக்கும் தினத்திற்கு 50ரூக்கு மேற்படாமல் பின்னும் அபராதம் விதிக்கலாம். இச்சட்டத்தின்படி கொடுக்க வேண்டிய தொகையை குற்றவாளி செலுத்தவில்லையென்றால் அத்தொகையை வசூலிக்க மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரம் உண்டு. வேணுமென்று புகையிலை உத்தியோகஸ்தரை இச்சட்டத்தின்படி அவர் செய்யும் கடமையைச் செய்யவொட்டாமல் தடுப்பவரை 3-மாதம் கடும் காவலிலோ அல்லது 500ரூ பரியந்தம் அபராதம் விதிப்பதற்கு மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரம் உண்டு. ஒருவர் பேரில் குற்றம் தொடுக்கப்பட்டால் அவ்விடம் இருக்கிற கலெக்டர் புகையிலை உத்தியோகஸ்தர் முதலியோருடைய மனுவின்பேரில்தான் குற்றவாளியின்மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

## சில நடவடிக்கைகளின்மேல் நிபந்தனைகள்.

(30-31) மாகாண சர்க்காருடைய அனுமதியில்லாமல் இச்சட்டத்தின் காரியங்களைச்செய்யும் அதிகாரிகளின்மேல் ஒருவரும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளமுடியாது. ஒரு அதிகாரி நல்ல எண்ணத்துடன் செய்யும் காரியத்திற்காக அவர்மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளக்கூடாது, குற்றம் நடந்து ஆறு மாதத்திற்குள்ளாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

(32-33) மாகாண சர்க்காருக்கு இச்சட்டத்தின் கீழ் விதிகள் செய்ய அதிகாரம் உண்டு. அதிகாரமானது அந்த விதிகள் ஒரு மாதத்திற்குக் குறையாதகாலம் முன்னதாகவே பிரசுரம் செய்ய வேண்டும் இச்சட்டத்தின்படி செய்யவேண்டிய காரியங்களுக்கு ஏதேனும் கஷ்டம் ஏற்பட்டால் அதை நிவர்த்தி செய்வதற்கு மாகாணசர்க்காருக்கு அதிகாரம்உண்டு.

# விற்பனை வரிச்சட்டம்

இச்சட்டம் எங்களுடைய வெள்ளி தங்க

சாமான்கள் வைரம் முதலியவைகளுடைய

விலைகளை பாதிக்கவில்லை.

## எப்போதும் எங்கள் விலை ஒரே விலை.

எங்கள் கம்பெனியை நேரிடை

வந்து பாருங்கள்

**313, எஸ்ப்லநேட், சென்னை,**

## ஸூராஜ்மால் லலூபாய்

டெலிபோன்: 2250